Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 65/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | அனிதா | Calling: | இல்லத்தரசி |
| Father's Name: | மாதேஸ்வரன் | Religion: | |
| Village: | ராமநாயக்கன்பேட்டை | Age: | 34 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 16.03.2026 நேரம் : 12.25 PM

( எதிரிகள் ஆஜர்)

அ.சா. 1 மனுவின் பேரில் அழைத்து எதிரிகள் தரப்பில் இரண்டாவது முறையாக குறுக்கு விசாரணை

நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் சொல்லிய சாட்சியங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் தான் சொல்லினேன் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றாலும் போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் காண்பித்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது என்றாலும் மற்றவிவரங்கள் அனைத்தும் எனது அண்ணன், அண்ணி கூற தான் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் இந்நாள் வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் அந்த இரும்பு ராடு எனக்கு தெரியும் என்றால் சரிதான். இரும்பு ராடால் என்னையும் என் மாமானார், மாமியாரையும் எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும் அதை காண்பித்து கொலைமிரட்டல்

விடுக்கவில்லை என்றாலும் சரிதான். 19.04.2024 இரவு 09.30 மணிக்கு இருட்டான பகுதியில் கீழே விழுந்துதான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அதை எதிரிகளுடன் சாமாதானமாக செல்வதற்காக போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். **அந்த சமாதான மனு எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அரசுதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க அனுமதிக்கபட்டு மறுவிசாரணை

இதே வழக்கில் 20.08.2025 மற்றும் 15.10.2025 ம் தேதி ஆகிய இருநாள்கள் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அளித்துள்ளேன். அதில் கூறிய சங்கதிகள் அன்றைய தேதிகளில் கூறியது பொய், இப்போது கூறியது உண்மை. நீதிமன்றத்தில் பொய்சொல்லக்கூடாது அவ்வாறு பொய்கூறினால் அது சட்டப்படி குற்றம் என்றால் நாங்கள் சமாதானம் ஆகிவிட்டோம்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அனிதா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K